FEBRUARY 2025

www.balamandir.org

மலர்-1 இதழ்-11

# MALARUM MOTTUKKAL

பால மந்திர் கின்ஷிப் கேர் (KINSHIP CARE) செய்திமடல்

# மலரும் மொட்டுக்கள்

## புத்தாண்டு கொண்டாட்டம்:

**1/01/2025** அன்று, உலகம் புதிய வருடத்தில் அடியெடுத்து வைத்த போது, பால மந்திரின் குழந்தைகள் புதிய ஆண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். பால மந்திர் முழுவதும் குழந்தைகளின் புன்னகையால் பிரகாசமாக இருந்தது

## பொங்கல் கொண்டாட்டம்:





**15/01/2025** அன்று, பால மந்திரில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. குழந்தைகள் அதிகாலையிலேயே எழுந்து பொங்கல் திருநாளை கொண்டாடுவதற்காக தயாராகினர். பால மந்திரில் உள்ள அனைவரும் ஒன்றுசேர்ந்து புதிய பானையில் பொங்கல் வைத்து மகிழ்ச்சியையும் பொங்கலையும் பகிர்ந்து கொண்டார். அந்த இடம் முழுவதும் கரும்புகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.



குழந்தைகளுக்காக பல வேடிக்கை மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இது குழந்தைகளுக்கு மகிழ்ச்சியான நாளாக அமைந்தது.

## குடியரசு தினம்

**26/01/2025** அன்று பாலமந்திரின் குழந்தைகள், குடியரசு தினத்தை தேசபக்தியுடன் கொண்டாடினர். மூவர்ண கொடியை ஏற்றி குழந்தைகள் மரியாதை செலுத்தினர்.







## உங்கள் சமூகப் பணியாளரைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.



ஜெகன் ராஜ் அவர்கள் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்தவர் இவர் கணினி அறிவியல் இளங்கலை **(BCA)** மற்றும் முதுகலை **(MCA)** பட்டமும், மேலும் சமூகப் பணியில் முதுகலை **(MSW)** பட்டமும் முடித்துள்ளர். பிப்ரவரி மாதம் **2024** முதல் பாலமந்திர் அறக்கட்டளையின் கின்ஷிப் கேர் திட்டத்தில் சமூகப்பணியாளராக சேர்ந்து ஈரோடு மாவட்டத்தில் தற்பொழுது **60** குடும்பங்கள் **95** குழந்தைகளை கவனித்து வருகிறார். இவர் தமிழ்நாடு அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் **3** முறை சிறந்த சமூகப்பணியாளர் விருதை பெற்றுள்ளார்.





பிறந்த குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்காக **UNICEF** மூலம் நடத்தப்பட்ட திட்டத்தில் இவர் பணியாற்றினார். இவர் சமூகப் பணியில் முதுகலை **(MSW)** பட்டம் படிக்கும் மாணவர்களுக்கு கள பணி பற்றி ஆலோசனையும் வழிகாட்டுதலும் வழங்கி வருகிறார்.

### பால மந்திர் - கின்ஷிப் கேர்:


ஜனவரி **2025** நிலவரப்படி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மையங்களில் **837** குடும்பங்களும் **1470** குழந்தைகளும் கின்ஷிப் கேர் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளனர். இவர்கள் அனைவரும் பால மந்திரின் பல்வேறு சேவைகளால் பயனடைந்து வருகின்றனர்.

## 10 வது தேர்வு தயாரிப்பு அமர்வு:



பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்களை உற்சாகப்படுத்தவும், தேர்வுகளை எதிர்கொள்ள அவர்களைத் தயார்படுத்துவதற்கு ஆலோசகர் திருமதி. சுஜாதா அவர்களின் மூலம் ஒரு அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னை மையத்தைச் சேர்ந்த **10**-ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் இதில் கலந்துக் கொண்டனர். இந்த அமர்வில் திருமதி. சுஜாதா அவர்கள் படிப்பின் எளிய நுட்பங்களைப் பற்றிப் பேசி, கல்வியில் சிறந்து விளங்குவதற்கு விளையாட்டு மற்றும் சரியான நேரத்தில் ஓய்வெடுப்பதன் முக்கியத்துவத்தை பற்றிப் பேசினார். இது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இது அவர்கள் பல பயனுள்ள குறிப்புகளை எடுத்துச் செல்லும் ஒரு தளமாக அமைந்து.

## கின்ஷிப் கேர் கிரவுட் ஃபண்டிங் (KC CROWD FUNDING)




கின்ஷிப் கேர் திட்டத்தின் மூலம் **1500** குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள். இதில் நிறைய குழந்தைகளுக்கு பள்ளிக் கட்டணம் செலுத்தப்படுகிறது. பல குழந்தைகளுக்கு டியூஷன் பீஸ் மற்றும் ஆட்டோ பீஸ், இன்னும் சில குழந்தைகளுக்கு தேவையின் அடிப்படையில் ஆன்லைன் வகுப்புகளில் கலந்து கொள்வதற்கு மொபைல் ரீசார்ஜ் - களும் செய்யப்படுகிறது.

இதற்கான தொகை நிறுவன நன்கொடையாளர்கள் **corporate donors (**கார்ப்பரேட் டோனர்ஸ்**)** மற்றும் தனிநபர் நன்கொடையாளர்கள் உதவியால் கிடைக்கிறது.









எனினும் இந்த சேவைகளுக்கான தொகை இதற்கு மேலும் தேவைப்படுவதால், கடந்த இரண்டு ஆண்டுகளாக வருடத்திற்கு ஒருமுறை **Crowd Funding Campaign** - ஒரு நிதி திரட்டும் நிகழ்ச்சியை பால மந்திர் நடத்திவருகிறது.



இதில் பல தன்னார்வலர்கள் **(volunteers)** ஒன்று சேர்ந்து அவர்களுக்கு தெரிந்தவர்களிடம் நிதி திரட்டினார்கள். கிட்டத்தட்ட **50**க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் இந்த **campaign**-ல் கலந்துகொண்டனர். இது மூன்று வாரத்திற்கு நடைபெறும் ஒரு நிகழ்ச்சி.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நீதி திரடியவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக பால மந்திரில் ஜனவரி **21**ஆம் தேதி ஒரு சிறு நிகழ்ச்சி நடைபெற்றது.

## பெற்றோருக்கான பகுதி: Parents' corner:

**Education is not just about books; it is about teaching a child to dream, believe, and achieve. A parent's role in this is irreplaceable.**



குழந்தைகளின் கல்வி மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்களின் வளர்ச்சி மற்றும் வெற்றிக்கு சுய ஒழுக்கத்தை வளர்ப்பது அவசியம். கடினமான சூழ்நிலைகளில் கூட குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகள், நடத்தை மற்றும் செயல்களை நிர்வகிக்க சுய ஒழுக்கம் உதவுகிறது. சில பயனுள்ள செயல்முறைங்கள் இந்த பதிவில் காணலாம்.

**A child's first teacher is his/her parent. The lessons of love, courage, and determination begin at home.**

### சுய ஒழக்கத்தை பெற்றோர் உதாரணமாக காட்டவும்:



குழந்தைகள் பெரும்பாலும் பெரியவர்களின் நடத்தையைப் பின்பற்றுவார்கள். எனவே, சுய ஒழுக்கத்திற்கு நீங்களே மாதிரியாக இருப்பது முக்கியம். மன அழுத்தம் தரும் சூழ்நிலையில் அமைதியாக இருங்கள் மற்றும் உங்கள் நேரத்தை சரியாகப் பயன்படுத்துங்கள் இவ்விரண்டும் சுய கட்டுப்பாட்டிற்கு உதவியாக இருக்கும்.

### தெளிவான எதிர்பார்ப்புகளை அமைக்கவும்:

குழந்தைகளிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது, கட்டுப்பாடுகளை பற்றிப் பேசி மற்றும் கட்டுப்பாடுகளை மீறினால் ஏற்படும் விளைவுகளை வலிவுறுத்தி, ஒரு செயல் அல்லது செயலின் விளைவுகள் என்ன என்பதை அறிவுறுத்துதல் அவசியம். இதனால் அவர்கள் கூடுதல் கவனத்துடன் இருப்பார்கள்.



### ஒரு கட்டமைக்கப்பட்ட சூழலை உருவாக்குங்கள் (Routine Plan) :

ஒரு தினசரி வழக்கத்தை ஏற்படுத்துங்கள். வீட்டுப்பாடம், வேலைகள், விளையாட்டு மற்றும் ஓய்வு ஆகியவற்றிற்கான நேரத்தை திட்டமிட்டு அதன்படி செயல்பட வையுங்கள். இதுபோன்ற நடைமுறைகள் பொறுப்பு மற்றும் சுய கட்டுப்பாட்டு உணர்வை வளர்க்கும்.

# YOUNG ACHIEVERS




ஆர்.பி. நந்திதா ஸ்ரீ (காஞ்சிபுரம்) பாரதம் புக் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ்.



கொங்குவேலன் (நாமக்கல்) மாரத்தான் போட்டி.




புவனேஷ் (காஞ்சிபுரம்) கோ-கோ போட்டி



சஞ்சீவ் (நாமக்கல்) தென்னிந்திய வில்வித்தை போட்டி முதலிடம்.




ஜி.மித்ரன் ( சென்னை) டம்பெல்ஸ் போட்டி முதல் பரிசு பெற்றார்.



தனுஷ் (காஞ்சிபுரம்) மற்றும் கராத்தே.



ஏ. ஹரிஹரன் (சேலம்) கராத்தே போட்டி.




க. ஜுவிதா காஞ்சிபுரம் புத்தகத் திருவிழாவில் வாக்களிப்பதின் அவசியம் பற்றி நாடகம்.



திலீபன் (காஞ்சிபுரம்) ஏ.பி.ஜே.அப்துல்கலாம் ஃபேஷன் டிரஸ் காம்பெடிஷன்.

# YOUNG ACHIEVERS



எம்.நவீன் ( சென்னை) குண்டு எறிதலில் முதலிடம்.



சஞ்சீவ் (சென்னை) இந்தியில் பட்டமளிப்பு பெற்றுள்ளார்.



ஸ்ரீ கார்த்திக் (ஈரோடு) ஆண்டு தேர்வில் முதலிடம்.



தன்ஷிகா (வேலூர்) பொங்கல் விளையாட்டுப் போட்டி.



வர்ணிகா (திருவள்ளூர்) ஸ்கிப்பிங் போட்டி.



ஆர்.பிரகியா ஸ்ரீ (திருவண்ணாமலை) அரையாண்டுத் தேர்வில் முதலிடம்.




திவாகர் மற்றும் ஸ்ரீமத (வேலூர்) அபாகஸ்.



எம்.நரேஷ் (சென்னை) வட்டு எறிதல் & குண்டு எறிதல் முதலிடம்



மேகவர்ஷினி (ஈரோடு) மாவட்ட அளவிலான செஸ் போட்டியில் முதலிடம்.

# YOUNG ACHIEVERS



ஸ்ரீநிதி (நாமக்கல்)
உணவுத் திருவிழா.



லேகா வர்ஷினி, லேனா சிவானி
(நாமக்கல்) சதுரங்கப் போட்டி.




ஸ்பந்தனா (நாமக்கல்)
கராத்தே போட்டி




த. கார்னிகா (சேலம்)
ஸ்பெல் பீ போட்டி 3வது பரிசு.




ஹரிவர்ஷன் (திருப்பூர்) நீளம்
தாண்டுதலில் மாநில அளவில்
3 ஆம் இடம் பெற்றார்.



தேஷ்விகாமுகுந்த் (நாமக்கல்)
காய்கறி விற்பனையாளர்
போட்டியில் முதலிடம்.




சுமேஷ் (திருவள்ளூர்) குண்டு
எறிதல் போட்டியில் முதலிடம்.

**மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!**